2015 ஆகஸ்ட் 31]
177—

உடற்பயிற்சிக் கூடம்

***37541—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, தி. சுப்புலாபுரம் ஊராட்சி, தி. சுப்புலாபுரத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் இமாலய வெற்றி பெற்றதன்மூலம் கின்னஸ் சாதனை படைத்து, ஐந்தாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் திருப்பாதத்தில் எனது நன்றியைத் தெரிவித்து இக்கேள்விக்கு விடையளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(அ) மற்றும் (ஆ) ஆண்டிப்பட்டி தொகுதி, தி. சுப்புலாபுரம் ஊராட்சி, தி. சுப்புலாபுரம் கிராமத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க தற்சமயம் அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியில் புரட்சி, சுகாதாரத்தில் புரட்சி என எதிலும் புரட்சி செய்து வருகின்றவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விளையாட்டுத் துறையிலும் ஒரு புரட்சியாக ஜவஹர்லால் நேரு தங்கக் கோப்பை, பத்தாவது சர்வதேச கால்பந்து போட்டியை, நேரு பெயரிலேயே விளையாட்டு அரங்கம் அமைத்து, சென்னையில் நடத்தி, சிறப்பு செய்த ஒரே முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, நாட்டின் தலைநகரில்*

நடைபெறும் மாபெரும் விளையாட்டுப் போட்டியான தெற்காசிய விளையாட்டுப் போட்டியை மாநிலத் தலைநகரில் நடத்திக் காட்டிய பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, தி. சுப்புலாபுரம் ஊராட்சியில் நெசவாளர்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். 10 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட அந்தப் பகுதியில் இளைஞர்கள், மாணவ, மாணவிகள் அதிகம் இருக்கிறார்கள். அங்கே ஓர் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். இதனை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு உடற்பயிற்சிக் கூடம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசும்போது, கல்வியில் புரட்சி, வேளாண்மையில் புரட்சி என பல்வேறு புரட்சிகளைச் சுட்டிக்காட்டினார்கள். தமிழக அரசின் விளையாட்டுத் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி பொற்காலமாகத் திகழ்ந்து வருகிறது என்பதை இங்கே பெருமையோடு நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சர்வதேச ஹாக்கி வீரர் பிலிப்ஸ் போன்றவர்கள், "நாங்களெல்லாம் அம்மா அவர்களது ஆட்சியில் விளையாட்டு வீரர்களாக இருந்திருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்பான திட்டத்தால் என் போன்ற விளையாட்டு வீரர்கள் கோடீஸ்வரர்களாக இருந்திருப்போம்" என்று கூறுகின்ற அளவுக்கு விளையாட்டுத் துறை மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2015 ஆகஸ்ட் 31]

சென்னைப் பல்கலைக்கழகமும், Amma Sports Foundation-னும் இணைந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் விளையாட்டுத் துறைக்கு ஆற்றியுள்ள சேவைகள் மற்றும் தீட்டிய, திட்டங்களை விளையாட்டு விழிப்புணர்ச்சி பேருந்துமூலம் மக்களிடம் கொண்டு செல்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் விளையாட்டுத் துறைக்கு ஆற்றப்படும் சேவைகளை கிராமங்களுக்கு எடுத்துச் செல்கின்ற ஓர் அருமையான நிகழ்ச்சி இதன்மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தமிழகத்தை விளையாட்டுத் துறையில் முதல் மாநிலமாக்கிட, சர்வதேச கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, பயிற்சிகள் கொடுத்து, விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, ஊக்கத் தொகைகள் வழங்கி விளையாட்டுத் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் புத்துணர்ச்சியூட்டி வருகிறார்கள்.

தேனி மாவட்டம், பெரியகுளம் அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் உடற்பயிற்சிக் கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியில் தேனி மாவட்டம், தேனியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியில் 17 மாவட்டத் தலைநகரங்களில் உள்ள விளையாட்டு வளாகங்களில் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்காக 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் தேனி மாவட்டமும் ஒன்று என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். உடற்பயிற்சிக் கூடம் கட்டப்பட்டு, துறையின்மூலம் 10 இலட்சம் ரூபாய் செலவில் உடற்பயிற்சிக் கருவிகள் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆண்டிப்பட்டி தொகுதியில் தலா 75 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 12 PYKKA Centres அமைக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு PYKKA Centre ஆண்டிப்பட்டி தொகுதி, தி. சுப்புலாபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் Volley ball, Kabaddi, Tennikoit, Badminton போன்ற விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் ஒவ்வொரு கிராமத்திற்கும் இதுபோன்ற PYKKA Centre அமைக்கப்படும் என்பதை இங்கே அன்போடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆண்டிப்பட்டி தொகுதிக்குட்பட்ட, கன்னியப்பாபிள்ளைபட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் Rajiv Gandhi Khel Abhiyan என்ற திட்டத்தின்மூலம் உள்கட்டமைப்பும், வெளி விளையாட்டு மைதானமும் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நாங்கள் கொடுத்துள்ள. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள். நான் பிறகு சொல்கிறேன். பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிக்கை அளிக்க அனுமதி கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) பிறகு பேசலாம்.*

4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) புதிய வருவாய் வட்டங்கள், கோட்டங்கள் உருவாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*